**8.89** பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகத்தின் கீழ் உள்ள பேரூராட்சிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் (Non Security) இளநிலை உதவியாளர் (Security) மற்றும தட்டச்சர் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியாளர்கள் தேர்வு செய்தல் – பணியிட மதிப்பீட்டிற்கு பணியாளர் குழுவின் அனுமதி (Approval of Staff Committee) பெறப்பட்டது – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை

அரசாணை (நிலை) எண். 44 நாள் : 6.2.2007

படிக்கப்பட்டது

பேரூராட்சிகளின் இயக்குநர், கடித எண். 17349 / அ2/ 2006 நாள் : 1.11.2006

ஆணை :

பேரூராட்சிகள் நிர்வாக இயக்ககத்தின் கீழ் இளநிலை உதவியாளர் (Non Security) இளநிலை உதவியாளர் (Secerity) மற்றும் தட்டச்சர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்றும், காலியாக உள்ள இப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்புவதற்கு இப்பணியிடங்களின் விவரங்களை குறிப்பிட்டு காலிப்பணியிட மதிப்பீட்டிற்கு (Estimate Vacancy) பணியாளர் குழுவின் (Staff Cornmittee) ஒப்புதலை பெற்று ஆணை வழங்குமாறு படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகள் இயக்குநர் அவர்கள் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பேரூராட்சிகள் இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. பேரூராட்சிகள் இயக்குநரால் அரசுக்கு அனுப்பியுள்ள கீழ்கண்ட காலியிடங்களை (Estimate of Vacancy) பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணிநியமனம் செய்துக் கொள்ள பணியாளர் குழு (Staff Committee) அனுமதி அளித்துள்ளது என்று பேரூராட்சிகள் இயக்குநருக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. இளநிலை உதவியாளர் (Non Security) – 401
2. இளநிலை உதவியாளர் (Security) – 523
3. தட்டச்சர் – 15

அ. மேற்காணும் இளநிலை உதவியாளர் (Non Security), இளநிலை உதவியாளர் (Security) மற்றும் தட்டச்சர் ஆகியவற்றிற்கான மொத்த பணியிட மதிப்பீட்டில் 50 விழுக்காடு காலிப்பணியிடங்களை தற்போது, மீதமுள்ள 50 விழுக்காடு பணியிடங்களை அடுத்த ஆண்டிலும் நிரப்பிக் கொள்ளலாம்.

ஆ. மேற்காணும் 50 விழுக்காடு பணியிடங்களை நிரப்பும் போது அவர்களது சம்பளம் மற்றும் ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் வருவாயில் 49 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இ. கீழ்காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

1. அரசாணை நிலை எண். 91, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 6.7.2006
2. அரசாணை நிலை எண். 95, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 12.7.2006
3. கடித நிலை எண். 187, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 16.10.2006

3. மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு காலிப்பணியிடங்களை நியமனம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**

அரசு செயலாளர்